இறைவன் துணை.

திருவாசகக் கோயிற்றிருப்பதிகம்

சொற்பொருளுரை

உரையாசிரியரும் - பதிப்பாசிரியரும்

திரு - அடிகளாசிரியன்

ஓய்வு பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

திருவருள் நிலையம், கூகையூர்-அஞ்சல் 606 306

கள்ளக்குறிச்சி வட்டம். தெ. ஆ. மா.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கு)

1—12—1981 விலை 2-00

பதிப்புரை

திருவாதவூரர் புராண ஆசிரியர், திருவாசகத்தில் கோயிற்றிருப்பதிகத்தை அப்பெயருள் வந்துள்ள கோயில் என்னும் சொல்லைச் சான்றாகக்கொண்டு கோயின் மூத்த திருப்பதிகத்தைப் போலத் தில்லையில் பாடப்பட்டது என்று கூறினார். பின்னர்வந்த திருப்பெருந்துறைப்புராண ஆசிரியரும் அவரைப் பின்பற்றி அவ்வாறே கூறிவிட்டார். ஆனால் பெரும் பற்றப் புலியூர் நம்பி தாம் இயற்றிய திரவிளையாடற் புராணத்துள் கோயிற்றிருப்பதிகம் திருப்பெருந்துறையில் அருட்குரவர் ஞானோபதேசம் செய்துவிட்டுப் பிரிந்த காலத்தில் மாணிக்க வாசகரால் பாடப்பட்டதென்று கூறுகிறார். வரலாற்றுச் சான்று கொண்டு நோக்கின் நம்பி கருத்தே ஏற்கத்தக்கதாகத் தெரிகிறது என்பதை என் ஆராய்ச்சி உரையால் உறுதி செய்துள்ளேன். இத்தலைமையான கருத்தையும் இதிலிருந்து தோன்றும் பிற கருத்துகளையும் வரலாற்றறிஞர் கூர்ந்து நடுநிலையாகக் கருதிப்பார்க்க வேண்டுகிறேன்.

இவ்வாராய்ச்சி உரையினையும் கோயிற்றிருப் பதிகத்திற்குச் சொற்பொருளுரையினையும் திங்களுக்கு முன்னரே அச்சிடக் கொடுத்தேன். ஆனால் சில இடையூறுகளால் அச்சிடப்பெறாமல் இடையே தடை ஏற்பட்டு விட்டது. இதனை உணர்ந்த என் அன்பார்ந்த சீடர் தாரமங்கலம் திரு.K.A.பழனியப்ப முதலியார் அவர்களின் சீரிய முயற்சியால் அத்தடை நீங்கி வெளிவருகிறது. அவர்க்கும்,

இதனை நல்லமுறையில் அச்சிட்டுக் கொடுத்த பாலாஜி பவர் பிரஸ், உரிமையாளர் அவர்கட்கும், பொருள் உதவியவர்கட்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் அச்சாவதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்தும், அச்சுப்பிழைகளைத் திருத்தியும் உதவிய என் முதல் மகன், அ.பேராசிரியனுக்கு என் அன்பார்ந்த நல்வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙன்,

1- 12- 81

குகையூர்

திரு.அடிகளாசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்,

குகையூர்- *606 306.*

இறைவன் துணை.

திருவாசகம்

கோயிற் றிருப்பதிக ஆராய்ச்சி

முன்னுரை

தோற்றுவாய் :

மாணிக்க வாசகப்பெருமான், திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தில் கோயின் மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம் என்று இரண்டு திருப்பதிகங்கள் (21, 22) அடுத்தடுத்து உள்ளன. திருவாசகத்தை அச்சிட்டவருள் பலர் இப்பதிகங்கள் இரண்டினையும் “தில்லையில் அருளிச் செய்யப்பட்டது” என்ற குறிப்புடன் அச்சிட்டுள்ளனர். இக்குறிப்பு கோயின் மூத்த திருப்பதிகத்திற்கே பொருந்துவதாகும்; கோயிற்றிருப் பதிகத்திற்குச் சிறிதும் பொருந்தாது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கோயின் மூத்த திருப்பதிகம் தில்லையில் பாடப்பட்டதே.

கோயின் மூத்த திருப்பதிகத்துள் ‘பொன்னம் பலத்தெம் முடியா முதலே’ (1) என்றும், ‘பொன்னம்பலக்கூத் துகந்தானே’ (2) என்றும், ‘பொன்னம் பலத்தெம் முழுமுதலே, (3) என்றும், ‘பொன்னம் பலத்தரைசே’ (4) என்றும், ‘பொன்னம் பலத்தாடும் அமுதே’ (5) என்றும், ‘பொன்னம் பலத்தெம் எந்தாய், (6) என்றும், ‘அம்பலக் கூத்தன், (7) என்றும், ‘பொன்னம்பலக் கூத்தா, (8) என்றும், ‘பொன்னம் பலத்தாடும் தலைவா, (9) என்றும், ‘பொன்னம்பல மென்றே’ (10) என்றும் பாடல்கள் தோறும் பொன்னம் பலத்தைப் பற்றிய குறிப்பு வருதலால் இப் பதிகம் தில்லையைக்குறித்த பதிகமாகலாம் அல்லது, தில்லையிலிருந்தும் பாடியிருக்கலாம். இதிற் சிறிதும் ஐயமில்லை.

கோயிற்றிருப்பதிகம் தில்லையில் பாடப்பட்ட தென்றற்கு அகச்சான்றில்லை

இனி, கோயிற்றிருப்பதிகத்தைப் பார்ப்போம். இப்பதிகத்தின் பத்துப்பாடல்களில் ‘திருப்பெருந்துறையுறை சிவனே’ என்ற சொற்றொடர் ஒன்பது பாடல்களிலும், ‘திருப்பெருந் துறையாய்’ என்ற சொற்றொடர் ஒரு பாடலிலும் காணப்படுகின்றன. தில்லையைப்பற்றிய குறிப்பு எந்தப் பாடல்களிலும் இல்லை. இவ்வாறிருத்தலால், இப்பதிகத்தைத் ‘தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்று கூறுதற்கு அகச்சான்றெதுவும் இல்லை.

கோயிற்றிருப்பதிகம் திருப்பெருந்துறையில் பாடப்பட்டதே.

கோயிற்றிருப்பதிகத்துள் 'திருப்பெருந்துறையுறை சிவனே, என்ற சொற்றொடர் ஒன்பது பாடல்களிலும், 'திருப்பெருந்துறையாய்' என்ற சொற்றொடர் ஒரு பாட்டிலுமாக, எல்லாப்பாடல்களிலும் திருப்பெருந்துறையைப் பற்றிய குறிப்பு இருத்தலானும், பெரும்பற்றப் புலியூர் நம்பி தாம் பாடிய திருவிளையாடற் புராணத்துள் இப்பதிகம் திருப்பெருந்துறையிற் பாடப்பட்ட தென்றே கூறுவதாலும், கோயிற்றிருப்பதிகம் திருப்பெருந்துறையிற் பாடப்பட்டதே.

கோயிற் றிருப்பதிகம் தில்லையில் பாடப்பட்ட தென்று யார் யார் கூறுகின்றனர் ?

திருவாதவூரர் புராணம் திருவம்பலச் சருக்கப்பாடலொன்று ''ஆடுமிக் குலாநற் றில்லை ஆண்டவன் றனைக்கொண் டென்னும், பாடலைப்புகன்று கோயில் இருவகைப்பதிகம் கூறி'' (406) என்று கூறுகின்றது. மாணிக்கவாசகர் பலதலங்களை யெல்லாம் தரிசனம் செய்து கொண்டு தில்லைக்கு வந்து குலாப்பத்தும் கோயின் மூத்த திருப்பதிகமும் கோயிற்றிருப்பதிகமும் பாடினார் என்பது அப்பாடற் பொருள். திருவாதவூரர் புராணத்தைப் பின்பற்றியே திருப்பெருந்துறைப் புராணமும் தில்லையை அடைந்த படலத்துப்பாடலொன்று ''திருக்குலாப்பத்தும் கோயில் திருப்பதிகம் இரண்டும்'' (17) பாடினார் என்று கூறுகின்றது. இந்த இரண்டு புராணத்தைப் பின்பற்றியே திருவாசகத்தை அச்சிட்டவருள் பலர் இவ்விரண்டு பதிகத்தையும் 'தில்லையில் அருளிச் செய்யப்பட்டது' என்ற குறிப்புடன் அச்சிட்டுள்ளனர். ஆனால், தஞ்சாவூர் பள்ளி அக்ராகரம் உயர்திரு-நீ-கந்தசாமிப் பிள்ளை அவர்கள் பல ஓலைப்பிரதிகளையும் பல அச்சுப்பிரதிகளையும் நன்கு ஆராய்ந்து அண்ணாமலைப்பல்கலைக் கழகப் பதிப்பாக அச்சிட்டு வெளிப்படுத்திய பதிப்பில் 'தில்லையில் அருளிச் செய்யப்பட்டது' என்ற குறிப்பு இல்லை.

பெரும்பற்றப் புலியூர் நம்பி கூறுவது.

மேலேகுறிப்பிட்ட திருவாதவூரர் புராணம் திருப்பெருந்துறைப் புராணங்கட்கு முந்திய காலத்தவர் பெரும்பற்றப்புலியூர் நம்பி. ஆவார். இவர்காலம் 13-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் என்று வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். அவர் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தே ஞானோபதேசம் செய்த திருவிளையாடலில் கீழ்வரும்

செய்தியைக் கூறுகிறார். அவர் கூறும் செய்தி:— பாண்டிய மன்னனுக்குக் குதிரை வாங்க வந்து பெருந்துறையை அடைந்த வாதவூரர், அங்கே குருந்தமரத்தின் நீழலிலிருந்த பெரிய ஆசானைக்கண்டு வணங்கி, ஞானோபதேசம் பெற்றனர். அப்பொழுது அவரைப் பரமஞானம் வந்தடைந்தது. நாவிலே நாமகளும் வந்தடைந்தாள் மலங்கள் மூன்றும் அகன்றன. அப்பொழுது குருமூர்த்தி அவரைப்பார்த்து‘ நீ சிவபாக்கியம் செய்தனை; காண வேண்டுவனவற்றை யெல்லாம் கண்டுகொண்டாய்; நீ நம்மைப்பாட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

கட்டளையை மேற்கொண்ட அவர் முதன் முதலாகச் சென்னிப் பத்தை ஓதினார். அடுத்து அச்சோப்பதிகம் பாடினார். அப்பொழுது அருட்குரவன் ‘இவரை முறைப்படி காண்பாயாக’ என்று கூற மாணிக்கவாசகர் அருட்குரவனுடன் போந்திருந்த பிரம்மசார்ய புதல்வரை முறைப்படி கண்டார். கண்டவர் அவர்களை நோக்கி அதிசயப்பத்து பாடினார். அப்பொழுது அங்கு வந்திருந்த அருட்குரவர் தம் கணங்களுடன் மறைந்தருளினார். இந்த நிலையில் கணங்களுடன் அருட்குரவனை நினைந்து கண்ணீர் பெருக அழுது, விம்மி, அரற்றி வாசகம் ஓதத்தொடங்கினார். அவர் ‘மாறிநின் றென்னை’ என்னும் கோயிற்பத்தும், புணர்ச்சிப்பத்தும், செத்திலாப் பத்தும், பிரார்த்தனைப்பத்தும், ஆசைப்பத்தும், உயிருண்ணிப் பத்தும், திருப்புலம்பலும், வாழாப்பத்தும், எண்ணப்பத்தும் பாடினார் என்பர்.

கோயிற்றிருப்பதிகம் திருப்பெருந்துறையிடத்தே பாடப்பட்ட தென்பதற்குப் பாடல்கள் தோறும் வந்துள்ள திருப்பெருந்துறை என்னும் சொல்லே சான்றாயிருப்பது போல, இப்பதிகம் தம் குருமூர்த்தியைப் பிரிந்த காலத்திலே பாடப்பட்ட தென்பதற்கு அப்பதிகத்தின் ஒன்பதாம் பாட்டே சான்றாக உள்ளது. ‘‘திருப்பெருந் துறையுறை சிவனே யாது நீ போவதோர் வகையெனக் கருளாய் வந்துநின் இணையடி தந்தே’’ (9) என்பது அப்பாட்டு; ‘‘திருப் பெருந்துறைச் சிவனே! நீ வந்து எனக்கு இணையடி தந்து ஞானோபதேசம் செய்து விட்டுப்பின்’ நீ பிரிந்து போவதற்குக் காரணம் யாது?’’ என்பது அப்பாடற் பொருள். இவற்றையெல்லாம் கருதி உணர்ந்த நம்பி, கோயிற்றிருப்பதிகம் திருப்பெருந்துறையிடத்தே தம் குருவைப்பிரிந்த நிலையில் மாணிக்கவாசகரால் பாடப்பட்ட தென்று கூறுவாராயினர்.

கோயிற்றிருப்பதிகம் என்ற பெயரில் கோயில் என்பது தில்லையைக் குறிக்கு மாதலால் அப்பதிகம் தில்லையில் பாடப்பட்டதே எனின்

'கோயிற்றிருப்பதிகம், என்ற பெயரில், 'கோயில், என்னும் சொல் தில்லைக்கு ஒரு பெயராதலால் அது தில்லையில் பாடப் பட்டிருக்க வேண்டும் எனின், நாம் அப்பதிகத்திற்கு அப்பெயர் கூறப்பட்டிருத்தலுக்குத் தக்க காரணத்தை ஆராய்ந்துணர வேண்டும்.

'கோயில், என்னும் சொல் தேவாலயத்திற்கும் அரசன்வாழும் அரண்மனைக்கும் பெயராக வரும் என்பதை நிகண்டுகளாலும் இலக்கியங்களாலும் உணர்ந்து கொள்ளலாம். மேலும் சைவர் I தில்லையினையும், வைணவர் திருவரங்கத்தினையும் கோயில் என்று வழங்குவர். திருநாவுக்கரசர், திருமூலர் முதலியோர் உடம்பினைக் கோயில் என்று கூறுகின்றனர். எனவே கோயில் என்பதற்குத் தேவாலயம், அரண்மனை, தில்லை, திருவரங்கம், இறைவன் எழுந்தருயிருளிக்கும் உடம்புஎன்று பொருள் கூறலாம் இப்பொருள் களில் எப்பொருள் பற்றி கோயிற்றிருப்பதிகம் என்றசொற்றொடரில் கோயில் என்னும் சொல்வந்துள்ள தென்பதை ஆராய்வோம். இவ்வாராய்ச்சிக்குமுன் இதற்குத்துணை செய்யும் சிலவற்றைக்கூறு கின்றேன். அண்டமாகிய நிலத்தில் குறிப்பிட்ட இடத்தில் சிவலிங்கம் ஒன்றினைத்தாபித்தால் அவ்விலிங்கம் தாவரலிங்கம் என்று பெயர் பெறும். பிண்டம் என்னும் உடம்பில் சிவலிங்கம் ஒன்றைத்தாபித்தால் அவ்விலிங்கம் சரலிங்கம் என்று பெயர் பெறும் இதனை.

> ''அடணத்தில் தாபித்த தாம்தா வரலிங்கம்
> பிண்டத்தில் தாபிக்கப் பெற்றக்கால்-கொண்ட பெயர்
> ஆனசர லிங்கமென அன்றே சிவாகமங்கள்
> ஈனமற வேயுரைக்கு மே'' (22)

என்னும் அத்துவித வெண்பாப் பாட்டால் உணரலாம். தாவர லிங்கம் ஒரேயிடத்தில் நிலையாயிருப்பது இதற்கு அண்டலிங்கம் என்னும் பெயர் சரலிங்கம் அடியவர் திருமேனியில் அணியப்பட்டு இயங்கி நிற்பது. இதற்குப்பிண்டலிங்கம் என்றும் பெயர். திருமூலர்

I மதுரையில் சொக்கநாதர் ஆலயத்திற்குப் பெரியகோயில் என்று பெயருண்டு.

'சரலிங்கம்' என்னும் வடமொழிச்சொல்லை 'நடமாடுங் கோயில் நம்பன்' என்று அழகான தமிழ்ச்சொல்லால் குறிப்பிடுகின்றார். நடமாடும் கோயில் அடியவரின் இயங்கும் உடம்பு; நம்பன் - இலிங்கம். எனவே, இலிங்கதாரணமுடைய அடியவரின் திருமேனி கோயிலென்றே வழங்கப்படுகின்றது.

வீரசைவ சமயத்தவர் தூல உடம்பிலே உருவமாகிய இட்ட லிங்கத்தினையும், சூக்கும உடம்பிலே அருவுருவாகிய பிராண லிங்கத்தையும், காரண உடம்பிலே அருவாகிய பாவ (ஞான) லிங்கத்தையும் ஆசிரியன் அருளால் பெற்று வழிபாடு செய்பவராவார் இதனை.

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினில் முப்பத் தாறும் உதிப்பன
மூன்றினின் உள்ளே முளைத்தெழும் சோதியை
காணடலும் காயக் கணக்கற்ற வாறே (2379)

என்று திருமூலர் கூறுகின்றார். மேலும் அவர் இட்டலிங்கம் கையில் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்யப் பெறுவதாலும், பிராண லிங்கம் மனத்தில் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்யப்பெறுவதாலும், பாவலிங்கம் காரண உடலில் வழிபாடு செய்யப் பெறுவதாலும்.

கண்காணி யாகவே கையகத் தேயெழும்
கண்காணி யாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யும்
கண்காணி யாகிய காதலன் தானே. (2072)

என்று கூறுகின்றார்.

இவ்வாறு மூன்று உடம்பும் இறைவனுக்கு இடமாக இருத்தலால், இறைவனுக்கு இடமாக்கப்பட்ட உடம்பினைக் I கோயிலென்றே அறிஞர் வழங்குவர். அப்பர் பெருமான் "காயமே கோயிலாக" என்பர். திருமூலர் இறைவன் என் உடம்பைக் கோயில் கொண்டான் என்னும் கருத்தில் "இது உணர்ந்தென்னுடல் கோயில்கொண்டானே" என்றும், (1723) "உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம் பாலயம்" என்றும், (1822) "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்" (725) என்றும்

கூறுவனவற்றை யெல்லாம் அறிஞர் நோக்குக. உடம்பில் புறத்தே சிவலிங்கத்தை நாட்டி வழிபடுவதும், உள்ளே மனம்முதலான வற்றில் சிவபெருமானை அமைத்து வழிபடுவதும் வீரசைவநெறி யாகும். இவ்வழிபாட்டின் கூறு எவரிடத்தே காணப்பட்டாலும் அது வீரசைவ வழிபாட்டின் ஒருபகுதியே யாகும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

மாணிக்கவாசகர் இறைவன் எழுந்தருளியுள்ள தம் உடம்பாகிய கோயிலைக் கருதிப்பாடியதே கோயிற்றிருப்பதிகம்.

கோயில் திருப்பதிகம் என்பது, தனக்கு ஞானோபதேசம் செய்த திருப்பெருந்துறைத் தேசிகர்மேல் எழுந்த மோகத்தைக் கூறவந்ததென்று "ஏயுங் கோயிற் திருப்பதிகம் பெருந்துறைத் தேசிகர் மோகம் இயம்ப லாகும்' என்று திருவாசக உண்மை கூறுகின்றது இக்கருத்திற்கிணங்கத், திருவாசகத்திற்கு அனுபூதி உரை செய்த சீகாழித் தாண்டவராயர் என்பவர் கோயிற்றிருப்பதி கத்தில் 'திருப்பெருந்துறையுறை சிவனே, என வரும் பகுதிக்குத், திருப்பெருந்துறைக் குருவே!, திருப்பெருந்துறைக் குருமணியான பரமசிவனே!, திருப்பெருந்துறைப் பதியாளும் சிவகுருவே!, திருப் பெருந்துறைப்பதியான எனது உயிர் அப்பனே!, என்று உரை கூறுகின்றார். எனவே, மாணிக்கவாசகர் "இறைவன் அருட் குருவாய் எழுந்தருளி வந்து தமக்குத் தீட்சை செய்த அருட் செயலில் ஈடுபாடுகொண்டு, மோகமுற்று, அத்தீட்சையின் கூறு பாடுகளை யெல்லாம் கூறி, குரு ஆன்மார்த்த வழிபாட்டிற்காகத் தந்த உடையவரைத் தம் உடம்பே திருக்கோயிலாகுமாறு எழுந் தருளிவித்துக்கொண்ட முறையைக் கூறுகின்றாராதலால்" இப் பதிகம் கோயிற்றிருப்பதிக மெனப் பெயர் பெற்றதென்க. இப்பதி கத்தை ஊன்றிப்படித்தால் திருப்பெருந்துறைத் தேசிகர் மாணிக்க வாசகர்க்குச் செய்த அருள் திறமாகிய தீட்சையின் கூறுபாடுகளை யெல்லாம் காணலாகும்.

குறிப்பு :— 1 "பரம்பரம், உணர்ந்திடு ஞானி பாரவர்
விரும்பிய வகைபெற விளங்கு மேனிதான்
அரும்பரம் பரமும்வந் தமர்ந்த தாதலால்
குரம்பையென் நிகழல்நற் கோயில் என்பவே

72 குறுந்திரட்டு.

கோயிற்றிருப்பதிகத்துள் கூறப்படும் தீட்சா முறைகளிற் சில.

வீரசைவ தீட்சா முறைகளுள் இலிங்காயதம் என்பது ஓர் தீட்சா முறையாகும். அது "அருச்சனைசெய் சிவலிங்கம் ஆசான் 317) என்று கூறியவாறு, ஆசான் மாணவனுக்குத்தரும் ஆன்மார்த்த இலிங்கத்திற்குச் செய்ய வேண்டிய சமஸ்காரங்களை யெல்லாம் செய்து பூசித்து, அவ்விலிங்கத்தை மாணவனுக்குத் தரிசிப்பிக்க அவன் தரிசித்ததாகும். தரிசித்த பின், சீடனின் உயிரை அச்சிவலிங்கத்தில் தாபித்து, அச்சிவலிங்கத்திள்ள சிவ கலையை சீடனின் உயிரில் தாபித்து, இவ்வகை ஏக பாவம் செய்த பின் அச்சிவலிங்கத்தை ஆசிரியன் மாணவன் கையில் தருவன். அதனை மாணவன் தன் கையில் ஏற்றுக்கொள்வான். இதற்கு 'அத்தத்தாற் பிடித்தல்' என்று பெயர். பிடித்த சிவலிங்கத்தைத் தன் உடம்பினுள் சிரம், கண்டம், நெஞ்சு முதலான உத்தமாங் கத்தில் மாணவன் அணிந்து கொள்வன். இதற்கு இலிங்க சுவாயதம் என்று பெயர் கூறப்படும். இந்த தீட்சா முறைகளை யெல்லாம் உணர்ந்து கொண்டு கோயிற்றிருப்பதிகத்திற்கு வருவோம்.

அப்பதிகத்தில் "அன்பினுல் அடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக, என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்" (2) என்பது, "ஏயும் கோயிற்றிருப்பதிகம் பெருந்துறைத்தேசிகர் மோகம் இயம்ப லாகும்" என்று திருவாசக உண்மை கூறுகின்ற வாறு, திருப்பெருந்துறைத் தேசிகன் செய்த தீட்சை யாகிய அருட்டிறத்தில் ஈடுபட்டுக்கூறியதாகும்.

ஆறும்பாட்டில் "கரந்ததோர் உருவே! களித்தனன் உன்னைக் கண்ணுறக்கண்டு" என்பது, ஆசிரியன் தரிசிப்பிக்கத் தரிசித்த லாகிய இலிங்காயத தீட்சை யாம். அடுத்து, "கொண்டு இன்றே களித்தன்" என்பது, அத்தத்தாற் பிடித்த லாகும். பிடித்த பத்தில் "சிக்கெனப் பிடித்தேன்" என்று கூறுவதையும் நோக்குக. திருமூலரும் "அத்தத்திஞலே அனையப் பிடித்தலும் அத்தத்தில் தம்மை அடைத்து நின்றுரே" என்பர். (அடைந்து நின்றுரே என்பதும் பாடம்)

ஏகபாவம் செய்த முறையினை மாணிக்க வாசகர்

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்" (கோயிற்-10)

என்ற பாடலால் குறிப்பிட்டுள்ளார் இம்முறையை

"சீடன துயிரை அந்தச் சிவலிங்கத் தன்னில் உய்த்துப்
பீடுறும் இலிங்கம் அன்னோன் பிராணனில் உறவி ருத்தி
ஏடென விரும்பும் ஆசான் இவ்வகை ஏக பாவம்
கூடுற இயலி லிங்கம் கொடுக்கவச் சீடன் கையில்"

(3-இலிங்கதாரணத்தலம். சித்தாந்தசிகாமணி)

என்பதனால் அறிக - மேற் குறிப்பிட்ட ஏக பாவ முறையைத் திருமூலர் சம்பிரதாயம் என்ற தலைப்பில் (ஆசிரியன் தீட்சா காலத்தில் செய்யும் வழக்கமான செயல்)

"பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
ஒட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாறினர் தன்னையும் என்னையும்
வட்டம தொத்து வாணிபம் வாய்த்ததே"

என்று தனக்கே வாணிபம் வாய்த்ததாக நயம்படக் கூறுகிறார்.

தீட்சை நிகழ்ந்த பொது மேற்கூறிய முறையில் அருட் குரவரால் அளிக்கப்பெற்ற சிவலிங்கத்தை மாணிக்க வாசகர் தம் உடம்பில் உத்தமாங்கத்தில் இடைவிடாமல் அணிந்திருந்தார். அதனால் அவர் உடம்பு இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாகப் பொலிவு பெற்று விளங்கிற்று - அந்த நிலையைக் கருதி எழுந்ததே கோயிற்றிப்பதிகமாம்.

மாணிக்க வாசகரின் உடல் இறைவனுக்குப்
பொன்னெனங் கோயில்.

மாணிக்க வாசகர் தாம்பாடிய கோயிற்றிப்பதிகத்தின் தொடக்கத்தில் "என் உள் எழுபரஞ்சோதியே! உள்ளவா காணவந் தருளாய்" (1) என்று வேண்டிக்கொள்ளுகிறார். அவர் அவ்வாறு வேண்டிக்கொள்வதின் கருத்து என்னை எனின்! எனக்குள் நிட்கள வடிவாய் உள்ள இறைவனே! என் தியான பூசனைப்பொருட்டு உன்னையான் காணுமாறு சகள (உருவாய்) வடிவாய் வந்தருள வேண்டும் என்பதாம்.

ஐந்தாம்பாட்டில் "இறைவனே! நீ என் உடல் இடம் கொண்டாய்; இனி உன்னை என் இரக்கேனே" என்று கூறுகிருர். இப்பதிக்குச் சீகாழித்தாண்டவராயர் "தேவரீரே, எனது காயமே கோயிலாக எழுந்தருளி அபேத அத்துவிதமாய் வாழ்வை யாகில், இனி, அடியேன் இரப்பது வேறுளதோ? வேண்டிய பயன் அவையே. (உடலிடமாய் எழுந்தருளி யிருத்தலே) என்பர். ஆன் மார்த்தமான உடையவரை எப்பொழுதும் பிரியாமல் உடம்பிலும் மனத்திலும், அறிவிலும் கொண்டிருத்தலால் வீரசைவத்திற்கு அத்துவித சைவம் என்ெருரு பெயருண்டு என்பதை இவ்விடத்தே கருத வேண்டும்.

கோயிற்றிருப்பதிகத்தின் ஈற்றுப்பாடலிலும்

"சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான்இதற் கிலனெர் கைம்மாறே"

என்று, மாணிக்க வாசகர் இறைவன் தம் உடலிடங்கொண்ட செய்தியைக் கூறுகின்ருர். உயர்திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் "எந்தையே ஈசா" என்று தொடங்கும் இப்பகுதிக்கு "அப்பனே! ஆண்டவனே! எனது உடலைக்கோயிலாகக்கொண்ட வனே! இந்த அருட் செய்கைக்கு உனக்கு அளித்தற்குரிய பதிலுப காரம் எதுவு மில்லா தேன்" என்று உரை வரைந்துள்ளார்.

இறைவன் தம்முடைய உடம்பினைத் திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிறப்பினை மாணிக்கவாசகர் பிடித்தபத்தில்.

"புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே."

என்னும் பாடலாலும் புலப்படுத்தியுள்ளார் இப்பகுதிக்கு, உயர்திரு கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் "தசையா லாகிய என் சிற்றுடம்பு மயிர்க்கால்கள் தோறும் நெகிழ்ச்சி அடையுமாறு அதனைப்பொன்னின லாகிய பெரிய கோயிலாகக்கருதி அதன்கண் எழுந்தருளி என் எலும்பையெல்லாம் உருகுவித்து எனக்கு எளிதில் வெளிப்படுபவனுகி என்னை ஆட்கொண்ட ஆண்டவனே! குற்றமில்லாத மாணிக்கமே!" என்று பொருள் எழுதியுள்ளார்.

முடிப்புரை :

மேற்கூறிய செய்திகளை எல்லாம் நடுநிலையான உள்ளத்தால் கருதிப்பார்த்தால், உடம்பினை இறைவன் கோயிலாகக்கொண்டருளிய செய்தியைக் கூறவந்த பதிகமாதலின் இப்பதிகத்திற்குக் கோயிற்றிருப்பதிகம் என்று பெயர் வந்ததென்பது நன்ருகத்தெரிகின்றது. இதற்கு முன்னே உள்ள கோயில் மூத்த திருப்பதிகம் மாணிக்க வாசகர் தில்லைக்கு வந்து தில்லைப்பெருமானைத் தரிசித்த நிலையில் அவரால் பாடப்பட்டதாகும். அப்படியாயின் அதற்கு 'மூத்த' என்னும் அடை எப்பொருள் கருதி வழங்கப்பட்டதெனின்? கோயிற்றிருப்பதிகம் மாணிக்க வாசகர்க்கு இறைவன் உபதேசித்துவிட்டு கணங்களுடன் மறைந்தபொழுது அவரால் பாடப்பட்டதாதலின் காலத்தால் முற்பட்டதாம். உபதேசம் புரிதல், நரி குதிரையாதல், குதிரை நரியாதல், பிட்டுக்கு மண் சுமத்தல் என்னும் திருவிளையாடல்களுக்குப் பின்னர் மாணிக்க வாசகர் தில்லைக்கு வந்தபொழுது கோயில் மூத்ததிருப்பதிகம் பாடப்பட்டதாதலால் இது காலத்தாற் பிற்பட்டதாம். அவ்வாறிருப்பினும் தில்லை, பொதுமக்கள் எல்லோராலும் போற்றப்படும் கோயிலாகையால் அதனைக்குறித்த பதிகத்தை மூத்த திருப்பதிகம் என்ற பெயரால் வழங்கினர் என்க.

எனவே, இக்கோயிற்றிருப்பதிகத்தால் மாணிக்கவாசகர் தம் உடம்பில் சிவலிங்கத்தை அணிந்திருந்தார் என்பதும், அவர் வீரசைவ ஆசிரியரால் வீரசைவ தீட்சா முறைப்படி ஞானோபதேசம் பெற்றிருந்தார் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. எனக்கு வீரசைவர் ஒருவர் வீட்டிலிருந்து கிடைத்த திருவாசக ஓலைப்பிரதியில் சிவபுராணத்தில் ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்ற அடி ''ஆகமும் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்றிருக்கக்கண்டேன். இது ''இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்ற அடிக்குப்பின் வருதலின் ''சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்'' என்னும் கோயிற்றிருப்பதிகப் பாட்டை ஒத்திருத்தலை அறிந்து மகிழ்ந்தேன். அப்பழஞ் சுவடியை நன்கு பாதுகாத்து வைத்திருக்கிறேன். ஆகம்-உடம்பு இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதிருந்த தோடல்லாமல் கோகழியில் குருமணியாய் வந்து ஆண்டான்; என் உடம்பின் கண்ணும் எழுந்தளியிருந்து அண்ணிப்பவனுனன், என்பது அப்பகுதிக்குப்

பொருளாரும் இவற்றையெல்லாம் கருதினல் வீரசைவ சமய சாத்திரக் கருத்துகள் நிறைந்த திருவாசகத்தை அக்கருத்துகள் புலப்படுமாறு அச்சிட வேண்டியிருக்கின்ற தென்பதை அறிஞர் சிந்திக்கவேண்டும்.

என் ஆராய்ச்சி உரையை உவப்பு வெறுப்பு இல்லாமல் அறிஞருலகம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இங்ஙனம்,

திருவருள் நிலையம்
குகையூர் 606306
2—9—1981

வித்துவான்-திரு. அடிகளாசிரியன்,
ஓய்வு பெற்ற தமிழ்ப்பேராசிரியர்.

வேண்டுகோள்.

தமிழ் வீரசைவ நூல்களிலிருந்து "வீரசைவ சமய சாத்திரத் திரட்டு," என்ற நூலையும், "திருமூலரும் வீரசைவ நெறியும்" என்ற நூலையும் எழுதி வைத்துள்ளேன். அவை வெளிவருதல் வேண்டும். **சித்தாந்த சிகாமணி முன்னுரையில்** வீரமாகேச செ. **நாகிசெட்டியார் அவர்கள்** "வீரசைவ சிம்காசநாதிபதியான மடாதிபதிகளும், சமய அபிமானிகளும் கனதனவான்களும், மற்றுமுள்ள பக்தர்களும். இவ்விடயத்தில் இயன்ற வரையில் உபகரித்து வீரசைவ சமயம் உத்தாரண மாதற்கும் வீரசைவ நூல்கள் அச்சேறி வெளிப்படுவதற்கும் சற்று கவனிப்பரேல், வேத வேதாந்தங்களும், சிவாகமங்கள் இருபத் தெட்டும் எடுத்தோதுவதும் சகல தேவர்கள் பசவாதி பிரதம கணங்கள், மகா ரிஷிகள் முதலியோரால் போற்றப்படுவது மாகிய சிவாத்துவித சமயமாகிய வீரசைவ சமயம் முன்போலவே தழைத் தோங்கி நிலைபெறுதலேயன்றி, அவர்களும் **சிவப்பிரசாதத் திற்கு உரியவராவார்கள்**" என்று எழுதியுள்ள கட்டுரையை நினைவுபடுத்துகிறேன்.

இறைவன் துணை.

திருவாசகம்.

கோயிற்றிருப்பதிக சொற்பொருள் உரை.

எழுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

பாடபேதம்:— "மாறநின் றென்னை என்னும் மாறிலொண் கோயிற் பத்து" என்னும் நம்பி திருவிளையாடற் புராணப்பாட்டினை நோக்கினல் இப்பாட்டின் முதலடிக்கு "மாறநின் றென்னை" என்றும் பாடம் உண்டு போலும். அப்புராணம் இதனைக் கோயிற் பத்து என்று கூறுகிறது. இப்பதிகம் முற்றிலும் அந்தாதித்தொடையால் அமைந்தது. ஈற்றுப்பாடல் "கைம்மாறே" என்று முடிதலின் இப்பாட்டின் முதலடி "மாறுநின் றென்னை" என்றும் பாடமிருக்கலாம்.

(கருத்து) இப்பாட்டு, அருவாய்த் தம் உள்ளே இருக்கும் இறைவனைத் தம் தியான பூசனைப் பொருட்டாக உருவடிவாய்க் கண்ணுற்காணுமாறு வந்து தம்மிடம் எழுந்தருள வேண்டும் என்று மாணிக்கவாசகர் வேண்டிக்கொள்வதாம்.

சொற்பொருள் உரை:— **தேறலின் தெளிவே**—உண்டென்று தெளிந்த உண்மைப் பொருள்களில் மிகத் தெளிவா யிருப்பவனே! தேறு - தெளிவு; தேறல் - அனுபவத்தாலும் நூல்களாலும் உண்டென்று தெளிந்த பொருள்.

சிவபெருமானே — மங்கலத்தன்மை வாய்ந்த அனதி முத்தனகிய பெரியோனே!

திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந்துறை என்னும் இடத்தை உயிர்களுக்கு அருள் செய்யும் இடமாக வரைந்து கொண்டு அங்கே எழுந்தருளியிருக்கும் சிவனே! சீகாழித் தாண்டவராயர் 'திருப்பெருந்துறைக்குருவே' என்று உரைகூறுவர்.

ஈறு இலாப்பரங்கள் யாவையும் கடந்த இன்பமே - சொற்பதம் கடந்த தொல்லோன், உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படான், கண் முதற் புலனால் காட்சியும் இல்லோன்'' (திருஅண்டப்பகுதி-111, 112, 113) என்று கூறியவாறு) அளவற்ற பதங்களாகிய ஆகம அளவையும், கருதலளவை காட்சி அளவையாகிய யாவையும் கடந்த (அவற்றால் உணரமுடியாத) சத்து, சித்து என்னும் இவற்றுடன் சேர்த்து என்னும் ஆனந்தமயமானவனே, பிரமாணாதீதன் என்றது.

என்னுடை அன்பே - என்னை உடைமைப்பொருளாகப் பெற்றிருக்கும் அன்புத்தலைவனே!

அமுதே ஊறி நின்று என் உள் எழுபரஞ்சோதி - ஆனந்தமயன் ஆதலின் இன்பத்தையே சுரத்து நின்று என் உள்ளே நிட்களமாய் விளங்கும் மேலான சித்துப்பொருளே!

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின் வழி அடைத்து உள்ளவா காண வந்து அருளாய் - என் அறிவிற்கு மாறுபட்டு நின்று என்னை உலகியலிற் செல்லுமாறு மயக்கிடும் வஞ்சகத் தன்மை வாய்ந்த ஐம்புலன்கள் செல்லும் தீயவழியினை அடைத்து அப் புலன்களால் உன்னை உள்ளபடி காண்பதற்கு நீ உருவடிவாய் வந்து என் வழிப்பாட்டினை ஏற்று அருள்புரிவாயாக என்றவாறு.

''மனமும், உடல் வாய் மூக்கு செவிகள் என்னும் ஐம்பொறியும், புறத்தே சென்று, ஊறு சுவை மணம் ஒலி உருவம் என்னும் புலன்களை நுகர்வதே உலக வாழ்வாதலால் மண்ணுலக வாழ்வில் வாழ்கிலேன்'' என்னும் கருத்தால் ''எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண் என்றிவை நின்கணே வைத்து, மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்'' (வாழாப்பத்து 5) என்று அடிகள் கூறியுள்ளதால் ''ஐம்புலன் செல்லும் தீய வழியினை அடைத்து அப்புலன்களால் உன்னைக்காணபதற்கு'' என்று உரை கூறப்பட்டுள்ளது.

உயிருள் இருக்கும் பிரமமாகிய இலிங்கத்தானே கிரியையாகிய பூசையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு கண்ணினுற் காணுமாறு இலிங்கவடிவாய் வந்து அருள்புரியும் என்பதை

''வேதமா முடிய னைத்தும் விளங்குறு அப் பிரமம் என்னும்
சோதிமா லிங்கம் எல்லா ஆவிகள் தோறும் நிற்கும்'' என்றும்

''அறிவு மேனியாய் உண்மையாய் ஆனந்த வடிவாய்ப்
பொறியு ருவொரு பிரமமே கிரியையின் பொருட்டுக்
குறியு ருவரும் இலிங்கமென் றுதலாற் கொண்ட
மறிவி லாவிலிங் கார்ச்சனை பலமெலாம் வழங்கும்'' என்றும்
சித்தாந்த சிகாமணி கூறும்.

மருத்துவன் கறக்கும் பசுவிற்கு வரும் ஒருவகையான நோய்க்கு அந்நோய் கெடுமாறு அப்பசுவின் பாலையே கறந்து அதற்கே ஊட்டுதல் போல், ஆசிரியர் உயிரின் ஆணவமலம் என்னும் நோய் கெடுமாறு உயிர்க்குள் உயிராய் நிற்கும் நிட்கள சிவத்தினை சகளவடிவாகிய இட்டலிங்கமாய்க் கரபீடத்தில் அருச்சிக்குமாறு தந்து பின் உயிர்க்குள் அமைவுறச் செய்வன் என்னும் கருத்தால்

''ஆவுறு பிணிகெட ஆவின் பால்கறந் (து)
ஆவினை ஊட்டல்போல் ஆண வம்கெட
ஆவியுள் அமலனை அங்கை தந்துபின்
ஆவியுள் அமைவுற ஆக்கும் ஆரியன்''

(15-இட்டலிங்க-பிரபுலிங்க லீலை)

என்று சிவப்பிரகாசர் கூறுவதையும் ஓம்பு நோக்குக மாணிக்க வாசகர் ஆன்மார்த்த இலிங்க வழிபாடுடையவர் என்பதை

நீங்கரும் பரிவிற் போந்து நீருதம் மனைக்கண எய்தி
ஆங்குயர் நாயகனுரைப் பூசைசெய் தமுது செய்தார்''

(ஞானோபதேசம்-நம்பிதிருவிளையாடற் புராணம்)

என்னும் பாடலால் உணர்க.

முடிவு :- தெளிவே! சிவபெருமானே! திருப்பெருந்துறையுறை சிவனே! இன்பமே! அன்பே! அமுதே ஊறிநின்று என் உள் எழுபரஞ்சோதி! புலன் ஐந்தின் வழி அடைத்துக் காண வந்து அருளாய்.

2 அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
　　ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
　　யானிதற் கிலனோர் கைம்மாறு
முன்புமாய்ப் ! பின்பு முழுதுமாய்ப் பரந்த
　　முத்தனே! முடிவிலா முதலே!
தென்பெருந் துறையாய்ச் சிவபெரு மானே!
　　சீருடைச் சிவபுரத் தரைசே!

பிரதிபேதம் ! பின்பும்

இப்பாட்டு இறைவன் தென்பெருந்துறைத் தேசிகனாய் வந்து செய்த அருட் செயலுக்கு (தீட்சைக்கு) கைம்மாறில்லை என்றது.

சொற்பொருள் :- முன்பும் ஆய் பின்பு முழுதும் ஆய் பரந்த முத்தனே-முன்னே நிற்கும் நிமித்த காரணனும் ஆகிப், பின்பு காரிய உலகம் அனைத்தும் ஆகி வியாபித்துள்ள அநாதி முத்தனே! முடிவு இலா முதலே - முதலாயிருக்கும் தலைமைத்தன்மைக்கு எக்காலத்திலும் அழிவில்லாதவனே! தென் பெருந்துறையாய் சிவ பெருமானே சீர் உடை சிவபுரத்து அரைசே-தெற்கே உள்ள பெருந்துறைக்குத் தலைவனே! மங்கல உருவாய் விளங்கி அடியவர் தம் மலத்தை ஒழிக்கும் பெருமானே! செல்வத்தையுடைய சிவபுரத்து அரசனே!

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தம் ஆய் கசிந்து உருக என் பரம் அல்லா இன் அருள் தந்தாய்-அன்பின் காரணத்தால் அடியேனுடைய உயிருடனே உடம்பும் இன்பமயமாகி நெகிழ்ந்து உருகும்பத்தி உண்டாவதற்கு ஏதுவாய் என்னுடைய தாங்கும் நிலைக்குத் தகுதி அல்லாத இனிய அருளைத்தந்தாய் 'பரம்' என்னும் சொல் பாரம் என்ற பொருளில் வருதலைப் பிங்கலத்தால் அறிக. பரம்-பாரம்; தாங்குதல் 'பரம் அல்லா அருள்' எனவே பேரருள் ஆயிற்று. இங்கே 'அருள்' என்பது இறைவன் ஆசிரியனாக வந்து ஞானோபதேசம் செய்தலை ஆசிரியன் செய்த அருள், அன்பினால் உருகுவதற்கு ஏதுவாயிற்று பத்தியின் உருகு பத்தி எவற்றும் உயர்ந்தது, (சித்தாந்த சிகாமணி) என்பர் அப்பத்தியைத் திருவாசகத்தில் நன்கு காணலாம்.

யான் இலன் இதற்கு ஓர் கைம்மாறு-நீ அருள் தந்ததற்கு, அடியேன் ஏதாவதொரு பதிலுதவியைச்செய்தற்கு ஒன்றுஇல்லாதவனாய் உள்ளேன்.

முடிபு :- முத்தனே! முதலே! தென்பெருந்துறையாய்! சிவபெருமானே! சிவபுரத்தரைசே அடியேன் அன்பினால் ஆனந்தம் ஆய் கசிந்து உருக என் பரம் அல்லாத அருள்தந்தாய்; இதற்கு ஓர் கைம்மாறு இலன்.

3 அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே

(கருத்து) இப்பாட்டு புகுந்து நின்று உருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடராகிய உன்னைப் புகழ்ந்துரைத்துப் பத்திசெய்யும் நெறியை உணர்த்துவாயாக என்றது.

சொற்பொருள் :- அரைசனே அன்பர்க்கு - அன்புடைய தொண்டர்க்குக் காவலனே!

அடியனேன் உடைய அப்பனே - அடியேனுக்குமட்டும் உரிமையான தந்தையே!

ஆவியோடு ஆக்கை புரைபுரை கனிய புகுந்து நின்று உருக்கி பொய் இருள் கடிந்த மெய் சுடரே - என் உயிருடன் உடம்பும் உள் துளை தோறும் கனியுமாறு இட்டலிங்கம் பிராணலிங்கம் பாவலிங்கம் என்னும் மூன்று இலிங்கமாகத் தூல உடம்பிலும் சூக்கும உடம்பிலும் காரண உடம்பிலும் புகுந்து அவற்றைத் திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருந்து அவ்வுடம்பினை உருகச்செய்து பொய்ப்பொருளை நிலையாகக்கருதச்செய்யும் அறியாமையை நீக்கிய மெய் ஒளியே!

திரை பொரா மன்னும் அமுத தெண்கடலே - அலைகள் எழுந்து தாக்காத நிலைபெறும் ஞானாமிர்தமாகிய தெளிவான கடலே! அக்கடல் ஐய விபரீதமாகிய திரைகளின் மோதல் இல்லாதது; நிலை பெற்றது; தெளிவாயிருப்ப தெண் க.

திருப்பெருந்துறை உறை சிவனே :- திருப்பெருந்துறையிலிருந்து சிவத்தன்மையைச் செய்பவனே!

உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே-ஆகம அளவையிணையும் தம் உணர்வினால் கொள்ளப்படும் அனுமானம் முதலிய அளவைகளையும் கடந்து நின்று, உன் திருவருளறிவின் அறிவுகொண்டு அறியப்படுவதோர் சித்துப்பொருளே!

யான் உன்னை உரைக்கும் ஆறு உணர்த்தே - அடியேன் உரை உணர்வு இறந்து நின்று உணரப்படும் சித்துப் பொருளாயிருக்கும் உன்னைப் புகழ்ந்துரைத்துப் பத்தி செய்யும் நெறியினை அடியேனுக்கு அறிவுறுத்துவாயாக.
உரைக்கும் ஆறு - கீர்த்தன பத்திநெறி.

முடிபு : அரைசனே! அப்பனே! மெய்ச்சுடரே! அமுதத் தெண்கடலே! திருப்பெருந்துறையுறை சிவனே! உணர்வே! யான் உன்னை உரைக்கும் ஆறு உணர்த்தே.

'ஆவியோடு' என்றதில் 'ஓடு' உயர்வு குறித்தது. உயர்ந்த ஆவியும், ஆக்கையும் கனியுமாறு மெய்ச்சுடராகிய இறைவன் ஆவியின் கண்ணும், ஆக்கையின் கண்ணும் புகுந்து, நின்று, உருக்கிப், பொய்யிருள் கடிந்தான் என்க.

4 உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனியென்ன குறையே.

(கருத்து) இப்பாடல் முனிவரும், உம்பரும் உன்னைக் குறுகாதொழிந்தனர்; உன்னைக் குறுகினேற்கு இனி என்ன குறை? என்று கூறியது.

சொற்பொருள் :- உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே (உன் அருள் கூடி உணர்த்தினாலன்றி) அடியேனுடைய அறிவிற்கும் தெரிதற்கரிய நுண் பொருளே !

இணங்கு இலி - பொருள் தன்மையைக் கருதிய பொழுது வேறு பொருளுடன் சேர்த்தெண்ணப்படாமல் வேறுபட்டே இருப்பவனே! இணங்குதல்-சேர்தல்; இலி-இல்லாதவர்.

எல்லா உயிர்கட்கும் உயிரே - இணங்கிலியாயிருப்பினும் எழு வகைத் தோற்றத்தையுடைய எல்லா உயிர்கட்கும் உள் உயிராய் இருப்பவனே!

எனை பிறப்பு அறுக்கும் எம் மருந்தே - அடியேனைப் பிறவித் தொடர்பிலிருந்து அறுத்துவிடும் எங்களுடைய மருந்தாயிருப் பவனே!

திணிந்தது ஓர் இருளில் தெளிந்த தூ வெளியே - செறிந்த தாகிய ஒப்பற்ற இருளில் அகப்பட்டிருந்தபொழுது வந்துதவிய தெளிவையுடைத்தான தூய்மையான விடியற்காலம் போன்ற வனே! வெளி-விடியற்காலம்,

திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந்துறையில் வாழ்ந்திருக்கும் குருவே!

குணங்கள் தாம் இல்லா இன்பமே-பிரகிருதி வசப்பட்டசாத்து விக இராசத தாமதம் என்னும் முக்குணங்கள்தாம் இல்லாத ஆனந்த மயமாயிருப்பவனே!

உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார் - தேவர்களுடன் அறிந்த பெரிய முனிவர்களும் உன்னைக் குறுகாமலேயே இருந்து விட்டனர் ‘குறுகினேற்கு’ எனப்பின் வருதலின், அதற்குரிய எதிர்ச்சொல் இங்கே வருவிக்கப்பட்டது. தேவரும் முனிவரும் உன்னைக் குறுகி வழிபட்டாரில்லை என்பது கருத்து.

உன்னை குறுகினேற்கு இனி என்ன குறையே - நீ என் உடம் பைப் பொன்னெடுங் கோயிலாய்க் கொள்ளுமாறு உன்னைக் கிட்டினேற்கு இனிமேல் என்ன குறை உண்டு? ஒரு குறையும் இல்லை என்பது கருத்து உன்னை குறுகப்பெருத உம்பர்கட்கும் முனிவர்கட்குமே பல குறைகள் உள்ளன என்பதும் கருத்தாம்.

முடிபு :- தெரிவரும் பொருளே! இணங்கிலியே! எல்லா உயிர்கட்கும் உயிரே! எம் மருந்தே! தூ வெளியே! சிவனே! இன்பமே! முனிவர் உம்பரோடு (உன்னைக் குறுகாமல்) ஒழிந்தார்; உன்னைக் குறுகினேனுக்கு இனிஎன்ன குறை? (ஒருகுறையுமில்லை)

5 குறையிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடம் கொண்டாய்
இனிஉன்னை என்இரக் கேனே.

(கருத்து) இப்பாடல் இறைவனே! நீ என் உடம்பினைத்திருக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளி இருப்பதால் வேறு என்ன வேண்டுமென்று உன்னை இரக்கேன் என்றது.

சொற்பொருள் :- குறைவு இலா நிறைவே - அங்கே இங்கே எனாதபடி எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் வியாபகமாய் இருக்கும் பொருளே! குறை - ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் இல்லாதிருத்தலும், ஒருகாலத்திலேயிருந்து மற்றொரு காலத்திலே இல்லாதிருத்தலுமாம் அக்குறை இல்லாமல் நிறைந்திருப்பவன் கடவுள். சர்வ வியாபகன் என்றதாம்.

கோது இலா அமுதே - ஐய விபரீதங்களாகிய குற்றமில்லாத ஞானமிர்தமே!

ஈறு இலா கொழும் சுடர்க் குன்றே - அழிவில்லாத செழுமையான ஒளிமலையே! மாணிக்கவாசகர் இறைவனைப் பொதுவாகக் ''குன்றே அனையாய்'' (7-குழைத்தபத்து) என்றும், விதந்து ''காவாய் கனகக்குன்றே'' (98-போற்றித்திரு அகவல்) என்றும், ''மாசற்ற மணிக்குன்றே'' (24-திருச்சதகம்) என்றும், ''திருவருட் குன்றே'' (9-கோயற்றிருப்பதிகம்) என்றும் ''சுடர்ப்பொற் குன்றை'' (1-புணர்ச்சிப்பத்து) என்றும் கூறுவனவற்றை ஒப்பு நோக்குக, மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து என் மனத்திடை மன்னிய மன்னே - மந்திர உருவாய், அம்மந்திரத்தின் பொருளாய் வந்து என் மனமாகிய கோயிலில் நிலைபெற எழுந்தருளியுள்ள மன்னவனே!

தூல உடம்பில் உருவான இட்டலிங்கத்தையும் சூக்கும உடம்பில் அருவுருவான பிராண லிங்கத்தையும், காரணவுடம்பில் அருவான பாவலிங்கத்தையும் அணிந்து வழிபடுதல் வீரசைவ நெறி, அவற்றுள் பிராண லிங்கம் மந்திர உருவாய் மனமென்னும்

சூக்கும உருவில் எழுந்தருளி யிருக்குமாதலால் ''மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து என் மனத்திடை மன்னிய மன்னே'' என்ருர் ''உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற'' (சிவபுராணம்) என்றும், ''சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்'' (10-கோயிற்) என்றும் கூறுவனவற்றை உணர்க மூன்று உடம்பிலும் இறைவன் எழுந்தருளியிருப்பன் என்பதை.

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினில் முப்பத் தாறும் உதிப்புள
மூன்றினின் உள்ளே முனைத்தெழுஞ் சோதியை
காண்டலும் காயக் கணக்கற்ற வாறே. [2479]

என்னும் திருமந்திரத்தால் உணர்க.

சிறை பெறு நீர் போல் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந்துறை உறை சிவனே - தடையைப் பெருத நீரினைப்போலச் சிந்தையின் கண் பரந்து நிற்கும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவனே! இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய் இனி உன்னை என் இரக்கேனே-மிக்கவனே! நீ என்னுடைய புன்புலால் யாக்கையினை பொன்னெடுங் கோயில் என்னும் இடமாகக் கொண்டனை இடங்கொண்டபின் உன்னை என்ன வேண்டுமென்று இரப்பேன் பரம்பொருளாகிய நீயே என் உடம்பிடங் கொண்ட பொழுது எனக்கு வேறு எப்பொருள் வேண்டும்? ஒன்றும் வேண்டுவதில்லை என்பது கருத்து.

இப்பகுதிக்குச் சீகாழித்தாண்டவராயர் ''தேவரீரே எனது காயமே கோயிலாக எழுந்தருளி அபேத அத்துவிதமாய் வாழ்வை யாகில், இனி அடியேன் இரப்பது வேறுளதோ? வேண்டிய பயன் அவையே'' எனச் சுவையாக உரை எழுதியுள்ளார்.

முடிபு - நிறைவே! அமுதே! சுடர்க்குன்றே! மன்னே! திருப்பெருந்துறையுரை சிவனே! இறைவனே! நீ என் உடலிடம் கொண்டாய் உன்னை இனி என் இரக்கேன்.

6 இரத்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

(கருத்து) இப்பாடல் ஆன்மார்த்த லிங்கமாகிய உடையவரைக் கண்ணுற் கண்டு கையிற்கொண்ட களிப்பினைக் கூறியது

சொற்பொருள்:- இரந்து இரந்து உருகஎன் மனத்துள்ளே எழுகின்ற சோதியே-எழுந்தருள வேண்டும் என்று வேண்டி வேண்டி உருக, என் மனக்கோயிலுள்ளே பிராண லிங்க சொரூபியாய் எழுகின்ற ஒளியே !

இமையோர் சிரந்தனில் பொலியும் கமலச் சேவடியாய்-தேவர் தம் தலைக்கண் தாமரை மலர்போலப் பொலிவுபெறும் சிவந்த அடியை உடையவனே !

திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் குற்றமற்ற மங்கல உருவனே !

நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால் ஆய் அவை அல்லையாய் ஆங்கே கரந்தது ஓர் உருவே - பரந்த ஆகாயமும் நீரும் நிலமும் நெருப்பும் காற்றும் என்னும் ஐம்பூதங்களும் ஆகி, அவை அல்லையாய், இவ்வாறு இரண்டு நிலையில் அவற்றுள் கலந்து நிற்கும் ஒப்பற்ற உருவப்பொருளே!

இங்கே 'உரு' என்றது ஆசிரியன் தீட்சா கலத்தில் ஆன்மார்த்தமாகத்தந்த உடையவரை. அந்த உருவாகிய உடையவர் எத்தகையர் என்னின்? ஐம்பூதமும் ஆகி, அவை அல்லாததும் ஆகி இவ்விருதன்மையில் அவற்றுள் கரந்து நிற்கும் உருவப் பொருள் என்க.

இவ்வுருவப் பொருள் ஏனைய உருவப்பொருளிலும் வேறுபட்டதென்பார் இவ்வாறு கூறினர்.

'நிரந்த' என்னும் சொல் 'பரந்த' என்னும் பொருளில் வந்துள்ளது. 'நிரந்த பாய்மா' (1849) என்னும் சிந்தாமணி பாடற் பகுதியை நோக்குக.

உன்னை கண்ணுற கண்டு கொண்டு இன்றே களித்தனன் - உருவப்பொருளாகிய உன்னை (உடையவரை) ஆசிரியனாகிய நீயே காட்ட, கண்ணாலே நன்கு கண்டு, தர கைக்கொண்டு இன்றே உவப்புற்றேன். கண்டு களித்தனன்; கொண்டு களித்தனன் என்று கூட்டுக.

தீட்சை நிகழுங் காலத்தில், ஆசிரியன், மாணவனுக்குச் கொடுக்க வேண்டிய ஆன்மார்த்த உடையவர்க்குச் செய்ய வேண்டிய சமஸ்காரங்களை யெல்லாம் செய்து, அபிடேக ஆராதனையும் செய்து முடித்தபின், அந்த உடையவரை மாணவன் தரிசிக்கச் செய்தலை இலிங்காயித தீட்சை என்று கூறுவர். அவ் வுடையவரை உடம்பில் பொருந்துமாறு அணிந்து கொள்ளுதல் இலிங்க சுவாயத தீக்கையாம். 'உடலிடங்கொண்டாய்' (5-10) என்பது அத்தீக்கையாகும். திறந்தெரிந்து கூறல், மயங்கக் கூறல் என்னும் இலக்கிய மரபு இரண்டில் இலிங்க சுவாயத தீக்கையை முன்னே (5) கூறி, இலிங்காயிதத்தைப் பின்னே கூறியது மயங்கக்கூறல் என்னும் மரபாகும்.

முடிபு :- சோதியே! சேவடியாய்! திருப்பெருந்துறையுறை சிவனே! உருவே! இன்று கண்ணுறக்கண்டு கொண்டுகளித்தனன்

இப்பாட்டினை அநுபூதி வியப்பிற்குப் பெருந்திரட்டு எடுத்து அமைத்துக் கொண்டது பக் 442.

7 இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ அல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

(கருத்து) இப்பாட்டு உள்ளக்கோயிலில் இறைவன் எழுந்தருளி இருக்கும் சிறப்பினை அறிந்து தியானிக்கும் முறை யினைக்கூறியது.

சொற்பொருள் - நீ அலால் பிறிது மற்று இன்மை சென்று சென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம் திருப்பெருந் துறை உறை சிவனே - முதல்வனாகிய நீ அல்லாமல், உன்னைப் போன்ற பிறிதும், மற்றும் இல்லாமையினாலே, மகாதூலமா யிருக்கும் நிலை சென்று, தூலநமம் தூலதரம் அபரதூலம் என்னும் நிலைமையும் சென்று, சதுரணுவாய்த் திரியணுவாய்த் துவியணு வாய்ப்பரமாணுவாகி அந்நிலைமையும் தேய்ந்து தேய்ந்து மிக நுண்ணிய ஒரே பொருளாய் விளங்கும் திருப்பெருந்துறை உறை சிவனே !

போற்றித் திருவகவலில் ''ஐயா போற்றி அணுவே போற்றி'' (112) என்றும், திருச்சதகத்தில்

''வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்று
அநேகன்ஏகன் அணு அணுவில் இறந்தாய் என்றங்(கு)
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய்''—(25) என்றும்,

''அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க'' (45-திரு அண்டம்)என்றும், மாணிக்கவாசகர் கூறியிருத்தலால்இறைவனை அணுவாகவும், (ஐயோன் - நுணுகியவன்) அணுவிற்கும் அப்பாற் பட்டு நுணுகியவனுவும் அவர் கருதுகின்றார் 'நுணிகி உள் கலந் தோன்' என்பது திருவிசைப்பா ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை யார் உன்னை அறியகிற்பாரே நீ இணங்கிலி ஆகையால் ஒருபொருளும் நீ அல்லை என்பதை உணர்ந்து கொண்டேன் நிமித்த காரணன் ஆகையால் நீயன்றி ஒன்றும் இயங்குமாறில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன்; உன் உண்மைத் தன்மையை அறியும் ஆற்றலுடையார் யாவர்?

இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன் 'யார் உன்னை அறியகிற்பாரே' என்று கூறப்பட்ட அறிதற்கரிய நீ இற்றைநாள் எளியேனுகிய எனக்கு ஞானோபதேசம் செய்தலாகிய அருளினைச் செய்து அறியாமையை நீக்கி உள்ளமாகிய மனத்திலும் உள்ளமாகிய காரண உடம்பிலும் முறையே பிராண லிங்கமாகவும் ஞானலிங்கமாகவும் நின்ற நின் தன்மையை தற்போது நினைவு அற நினைந்தேன். நீ என் உள்ளக் கோயிலில் எழுந்தருளியிருப்பது எதுபோன்ற தெனின்? உதிக்கும் கதிரவன் நிற்பதைப் போலாகிப் பொய்யிருள் போவதற்கு ஏதுவாயிற்று, உள்ளம் என்பது சூக்கும உடம்பையும் காரண உடம்பையும் உயிராகிய தன்னையும் உணர்த்தும்.

முடிபு - நீ அலால் பிறிதும் மற்றும் இன்மையால் சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் சிவனே! ஒன்றும் நீ அல்லை; நீ அன்றி ஒன்றில்லை; உன்னை அறிய கிற்பார் யார்? அத்தகைய நீ இன்று எனக்கு அருளி உள்ளத்திலே இருளைக்கடிந்து நின்ற நின் தன்மை; அத்தன்மையை நினைப்பு அற நினைந்தேன்.

கடவுட் பொருளைச் சித்தத்தினுலே சிந்தித்து உணர்வோம் எனின் சித்தமும் மாயா காரியமாய்ச் சீவனுக்குப்பந்தமாதலின் மாயையின் காரியமாகிய சித்தத்தினுலே மாயாதீதனுகிய இறைவனை அறியத் தொடங்குவது திணிந்த இருளில் உள்ளவன் மின்மினிச்சோதியால் தன்வீட்டை அடைய முயலுபவன் செய்தி என்று கூறும் அவிரோத உந்தியார்ப் பாடலுக்கு (48) 'இன்றெனக்கருள' என்ற பாட்டு மேற்கோள்.

8 பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
   பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
   நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
   திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
   ஆனந்தம் ஆக்குமென் சோதி

(கருத்து) இப்பாட்டு திருவருட் சீரினை உடைய சிந்தையை நீ திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளி யிருக்கும் சிறப்பால், என் உள்ளம் சமநிலை பெற்றது; அதனுல் இவ்வுலகிலுள்ள எவரும் உறவினரில்லை; அயலாரு மில்லை என்றது.

சொற்பொருள் :- பார் பதம் அண்டம் அனைத்தும் ஆய் முளைத்து பரந்தது ஓர் படர் ஒளிப்பரப்பே-நில உலகமும் இந்திரன் முதலான இமையவர் பதமும் ஏனைய அண்டங்களும் அவற்றிலுள்ள அனைத்துப் பொருள்களும் தானே ஆய் இருக்குமாறு தனக்குள் அடங்குமாறு கொண்டு பரசிவத்தலத்திலிருந்து தோன்றி எங்கும் வியாபித்து நிற்கும் ஒன்ருகிய திருவருட்சத்தி என்னும்படரொளிப் பரம்பே; படரொளிப்பரப்பு - இறைவனுடைய சமவாய சத்தி அச் சத்தி பதிதல் தீக்கைக்கு ஏது. அத்தீக்கையை 'நீருறுதீயே' என்று அடுத்துக் கூறுகிருர்.

பார், பதம், அண்டம், அனைத்தும் திருவருட் சத்திக்குள் அடங்கியிருக்கும் இயல்பினைச் சிந்தித்திருப்பது ஒருவகை யோக நிலையாகும் ஓதும் அண்டங்கள் யாவும் வந்து உதித்தற்கு ஏதுவா யிருப்பது விமரிசம் என்னும் சிவ சத்தியாகும் பரந்ததாகிய 'விமரிசம்' என்னும் பாண்டத்திலே தத்துவங்களெல்லாம் அடங்கி யிருத்தலைக்கருதித் தானும் அச்சிவசத்தியின் வசமாய் ஒழுகுதலைக் குறித்துக்கொண்டிருப்பன் அயிக்கியன் என்னும் வீரசைவ ஞானி.

இதனை,

"அண்டம் நூறுகோ டிகள்படைப் புடன்நிலை அழிவு
கொண்ட தோர்இட மாகிய அதனையே குறித்துக்
கண்ட தோர்விம ரிசந்தனைக் கசடற உணர்வால்
பண்டை நூலுணர் பவர்பாண்டத் தலமெனப் பகர்வார்"

என்பது சித்தாந்த சிகாமணி (1-பாண்டத்தலம்) கூறும் இந்த யோகநிலையினை

"அண்டம்மே விட அனைத்தும் அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல்போல் எவையும் ஞானம் குறைவிலா, நிறைதலாலே
கண்டதோர் பொருளை அந்தக் கருத்தினால் காணில் தானே
அண்டநா யகனார் மேனி ஆனதேல் ஐயம் இன்றே"
என்பர் உமாபதி சிவம் (சிவப்பிரகாசம்)

நீர் உறு தீயே - என்றது தீட்சையை. "நீரின் செய்தியுடன் கூடிய தீயின் செய்தியையுடைய தீட்சையாக இருப்பவனே" என்பது பொருள். நீர் அழுக்கை நீக்கித்தூய்மையை உண்டாக்கும் இதனை "புறத்தூய்மை நீரால் அமையும்" என்ற திருக்குறளால் உணர்க. தீ விளக்கம் தந்து பொருள்களை அறிய உதவி புரியும். தீக்கை (தீட்சை, தீக்ஷா) என்றசொல்லிற்கு "மலங்களை அகற்றிச் சுத்தனாக்கிச் சிவத்தினை அறியச்செய்வது" என்று பொருள் கூறப்படுவதை.

"அகயிருள் மாயை கருமமிம் மூன்றும் அகற்றியே சுத்தனும் ஆக்கித் தக நிறுத்திடுதல் கையதாம் அப்பால் தன்னுயி ராகியே நிகழும் சுக சிவ உதய மாக்குதல் தீயாம்" என்னும் சுத்த சாதகத் தால் அறிக மேலும்நீரில் மறைந்திருக்கும் நெருப்புப்போன்றவனே என்றும் உரைகொள்க; இக்கருத்தினை "நீரில் மறைந்து நிற்கும்" நெருப்பாய்த்திகழ்கிறது; தாவர பழச்சாற்றின் சுவை போலிருக் கிறது; மொட்டில் நிறைந்த மணம் போலிருக்கிறது, கன்னிப் பெண்ணின் காதல் நினைவு போலிருக்கிறது, கூடல சங்கம தேவா! நின்னியல்பே (373) என்னும் வசவண்ணர் வாக்கமுதை நோக்கி அறிக.

நினைவதேல் அரிய நின்மலா-என் நினைவால் உன்னைக்கருதத் தொடங்கின் நினைத்தற்கரிய நின்மலனே!

நின் அருள் வெள்ளச் சீர் உறு சிந்தை எழுந்தது ஓர் தேனே-என் நினைவால் நினைதற் கரிய நின்மலனாக நீ யிருப்பினும், உன்னுடைய திருவருட் பெருக்காகிய செல்வத்தினைப் பெற்ற என் சிந்தையாகிய திருக்கோயிலில் பிராணலிங்க உருவாய் எழுந்து விளங்கும் தேன் போன்றவனே! சீர்-செல்வம்.

திருப்பெருந்துறை உறை சிவனே-எனக்குத்தீக்கைவாயிலாய் அருட்பெருக்கத்தைச் செய்த திருப்பெருந்துறையுறைக் குருவே!

ஆனந்தம் ஆக்கும் என் சோதி - ஆனந்த மயனாயிருந்து எனக்கு ஆனந்தத்தை உண்டாக்கும் என்னுடைய சோதியே!

யார் உறவு எனக்கு இங்கு யார் அயல் உள்ளார் - உன் அருட் பெருக்காகிய செல்வத்தைப் பெற்ற என் சிந்தையில் நீ தேனைப் போல எழுந்தருளியிருத்தலால் எனக்கு இந்த உலகில் உறவினர் யாவர்? பகையாகவும் நொதுமலாகவும் இருக்கும் அயலாயுள்ளவர் யாவர்? ஒருவரும் இல்லை என்பது கருத்து.

முடிபு - படரொளிப் பரப்பே! நீருறு தீயே! நின்மலா! தேனே! சிவனே! என்சோதி! இங்கு யார் உறவு? யார் அயல் உள்ளார்?

"ஒருபரம் அல்லது ஒருவரைக்காணு ஒருதவர்க் குண்டுகொல் உந்தீபற உறவும் பகையுமென் றுந்தீபற" (98) என்னும் அவிரோத உந்தியார் பாடல் உரைக்கு இப்பாடலை மேற்கோள் காட்டுவர் சிதம்பர சுவாமிகள்.

9 சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும்ஆ னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

(கருத்து) இப்பாட்டு ஞானோபதேசம் செய்தருளிய ஆசிரியர் பிரிந்த பொழுது, பிரிவாற்றாமல் கூறியது.

சொற்பொருள் :- சோதி ஆய் தோன்றும் உருவமே- ஒளிமயமாய் விளங்கும் உருவத்திருமேனியை உடையவனே!

அருவாம் ஒருவனே - உருவமில்லா திருக்கும் ஒன்றான இறைவனே!

சொல்லுதற்கு அரியஆதியே நடுவே அந்தமே (உயிர்கள்பந்தமுற்ற பொழுது அவர்கட்குப் பயன்படுமாறு) தனு கரண புவன போகங்களைப் படைத்தலைச் செய்யும் நான்முகனே! அவற்றைக் காத்தலைச் செய்யும் திருமாலே! அவற்றை அழித்தலைச் செய்யும் அரனே!

பந்தம் அறுக்கும் ஆனந்த மா கடலே (பந்தத்தை உற்ற உயிர்கள் முத்திபெறும் நிலையில் அவ்வுயிர்களின்) பாச பந்தங்களை அறுத்துவிடும் ஆனந்த மயமாகிய பெருங்கடலே!

தீது இலா நன்மை திரு அருள் குன்றே-தீமை என்பதே இல்லாமல் நன்மை என்பதனையே உடைய திருவருளாகிய குன்றமே!

''காவாய் கனகக் குன்றே'' 4-98
''மாசற்ற மணிக்குன் றே'' 5-28
''கொழுஞ்சுடர்க் குன்றே'' 22-5

என வருவதனை ஒப்பு நோக்குக. இறைவனைக் குன்றாகக் கூறிய தன்றி மலையாகவும் கூறுவர்.

''ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி'' 1-16
''மாலமுதப் பெருங்கடலே மலையே'' திருச்சதகம்-26
''முத்தி அருளுமலை'' திருத்தசாங்கம்-5
''அருணிதி தரவரும் ஆனந்த மலையே'' திருப்பள்ளியெழுச்சி - 2
எனும் இவற்றையும் ஒப்பு நோக்குக.

வந்து நின் இணை அடிதந்து நீ போவது ஓர் வகையாதுஎனக்கு அருளாய்-இறைவனே! நீ ஆசிரியனாய் வந்து உன்னுடைய இரண்டு திருவடிகளைத்தந்து அருள் செய்தபின், நீ என்னைப் பிரிந்து போதலாகிய ஓர் வகைக்குக் காரணம் யாது? எனக்குக் கூறி அருள்வாயாக. (எ-று)

இப்பாடற் பொருளை நன்குணர்ந்த பெரும்பற்றப் புலியூர் நம்பியார் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் ஞானோப தேசம் செய்த திருவிளையாடலில் இறைவன் குருவாக வந்து மாணிக்க வாசகர்க்கு உபதேசித்த பின், மாணிக்க வாசக! இங்கே நில்லென்று இயம்பி மறைந்தனர். குருவைப்பிரிந்த மாணிக்க வாசகர் குழுவினோடு குருவை நினைந்து இணை விழிகள் ஆற்றினைப்போல் நீரினைச் சொரிய விழுந்து எழுந்து அழுது விம்மி அரற்றி நின்று ஒழிவில் வாசகம் ஓதத் தொடங்கினர். அப்பொழுது "மாறிநின் றென்னை" என்னும் கோயிற்பத்தை முதலில் பாடினர் என்பர்.

வரலாற்றுச் சான்றுகளைத் தேடிப்பிடித்து அச்சான்றுகளை வைத்துக்கொண்டு இலக்கியம் எழுதுதலை மேற்கொண்டவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி, அவர் நரி குதிரையான திருவிளை யாடலில்

மின்னிய உலகு தன்னில்
வித்தின்றி நாறு செய்வோன்
நன்னெறி இல்லாப் பொல்லா
நரகரைத் தேவு செய்வோன்
மன்னிய நரிகள் தம்மை
மறுகெலாம் வாவி யேறித்
தென்னன்முன் குதிரை யாகச்
செய்புதோன் ருமல் விட்டான். (84) என்பர்.

இப்பாட்டு 'நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும், விரதங்கொண் டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்'' என்னும் திருநாவுக்கரசு தேவாரத்தை அடியொற்றி எழுந்துள்ளது

10 தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டயெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே.

(கருத்து) இப்பாட்டு தீட்சை நிகழ்த்திய பொழுது உன்னைத் தந்து என்னைக் கொண்டனை. யான் உன்னைப் பெற்றதனால் அளவிலா ஆனந்தம் பெற்றேன்; ஆனால் நீ என்னைக் கொண்டதனால் என்பால் நீ பெற்றது என்ன? இந்த வகையிற் சதுரர் யார்? எனவும், நீ என் உடம்பினைத் திருக்கோயிலாகக் கொண்டாய் இதற்கு யான் கைம்மாறு இலன் எனவும் இரண்டு செய்தியைக் கூறுகின்றது இது ஆன்மார்த்த இலிங்கத்தை நோக்கிக்கூறியது.

சொற்பொருள்:- தந்தது உன்றன்னை கொண்டது என்றன்னை சங்கரா-சங்கரனே! நீ ஆசிரியனாக எழுந்தருளித் தீட்சை புரிந்த காலத்தில் நீ ஆன்மார்த்த இலிங்கமாய் விளங்கி, உன்னை எனக்குள் தந்தாய்; என்னை உனக்குள் கொண்டாய்; (இதன் விளக்கத்தை முன்னுரையிற் காண்க.) அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்றது ஒன்று என்பால் (உன்னை எனக்குள் தந்ததனால்) யான் அளவற்ற ஆனந்தத்தைப் பெற்றேன்; ஆனால் என்னை உனக்குள் கொண்டதனால் என்பால் நீ பெற்றதொன்று யாது? என்பது எனக்கு விளங்கவில்லை.

சதுரர் ஆர் கொலோ - நம்மிருவரில் சமர்த்தர் யார் என்பதும் விளங்கவில்லை; இதற்குப்பதில் தேவரீரே கூறல் வேண்டும் என்பது கருத்து சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறை உறை சிவனே எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்-என் சித்தத்தின் கண் பிராண லிங்கவடிவாகத் திருக்கோயில் கொண்ட எம்பெருமானே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவனே! எங்கள் தந்தையே! இறைவனே! இட்டலிங்க வடிவாய் என் உடலையும் நீ எழுந்தருளியிருப்பதற்குக் கோயிலாகக் கொண்டாய்;

உடம்பினைக் கோயிலாகக் கொண்டு இறைவன் எழுந்தருளியிருக்கும் முறையினை "புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து" (10 பிடித்த பத்து) என்பதனாலும் உரைப்பர். நீத்தல் விண்ணப்பத்தில் "அடியாரும் உன்னை எப்பொழுதும் எவ்விடத்தும் விடுதலில்லாதவர்; இறைவனே! நீயும் அவர்தம் உடம்பினை இல்லமாகக் கொண்டு நிலை பெற்றிருப்பாய்" என்னும் பொருள்பட "விடலில்லடியார் உடல் இலமே மன்னும் உத்தரகோசமங்கைக்கரசே" (13) என்பர் மணிவாசகர் இதற்கு ஓர் கைம்மாறு யான் இலன் - சிந்தையே கோயில் கொண்டதன்றி, என் உடம்பினையும் திருக்கோயிலாகக் கொண்ட இதற்கு ஓர் பதில் உதவியை யான் உனக்குச் செய்ய பெற்றிலேன் (எ-று)

கரை தெரியாது புனல்பெருகி நிலையழிந்து வரும் ஓர் பெரிய ஆற்றினைக் கடந்து அக்கரை செல்லக் கருதினவருள், நல்ல தெப்பத்தைக் கைவிடாது பற்றி நீந்துமவரே அக்கரை ஏறுவார் அங்கனம் நீந்துங் காலத்தும் கைதவறித் தெப்பத்தினை விட்டவர். அக்கரை செல்லாது ஆற்றுப்புனலில் அழுந்துவர்; அது போலப் பிறவிக்கடலைக் கடத்திவிடுந் தெப்பமாகிய இட்டலிங்கத்தினைக் கணப்பொழுதாயினும் கைவிட்டவர் பிறவிக்கடலுள் அழுந்தி விடுவர்'' என்னும் செய்தியை,

> ''ஆறேறு வார்கள் அரியதெப்பம் அங்கத்தின்
> வேருகா தார்கரையின் மேவுவர்கள் - ஆறேருர்
> தெப்பமகன் ரேர்கள் இதுபோற சிவலிங்கம்
> அற்பமகன் ரேர்பிறப்பாழ் வார்'' (40)

என்னும் அத்துவித வெண்பாப் பாட்டாலும்,

தூல உடலுக்குத் தெப்பம் கிடைப்பின் தூலத்தில் உள்ள சூக்கும உடம்பும் ஆற்றைக் கடந்து அக்கரை சேரும். தூல உடம்பு தெப்ப மேநி, ஆற்றைக் கடக்கா விட்டால் சூக்கும உடம்பும் ஆற்றைக் கடவாது. அது போல, தூல உடலில் இட்டலிங்கமணிந்து அதனை வழிபட்டு நிட்டையுறில் சூக்கும உடம்பின் பகுதியாகிய மனமும் ஒன்றுபட்டு நிற்கும் என்னும் செய்தியை

> ''ஆலத்தில் தெப்பமுறில் சூக்குமமும் ஆறேறும்
> ஆலத்தின் றேற்சூக்கந் தானேரு - ஆலத்தில்
> இட்டலிங்க நிட்டையுறில் எய்துமன மும்ஒன்று
> பட்டுவினை நீங்குமெனப் பார்'' (41)

என்னும் அத்துவித வெண்பாப் பாட்டாலும் உணரலாம்

இக்காரணங்களால் சிந்தையே கோயில் கொண்ட பெருமான் உடலிடமும் கொள்ள வேண்டுவதாயிற்று.

இப்பகுதிக்கு வேறு உரை:- இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு குருவாய் வந்து சீடனுடைய ஆவியோடாக்கை முதலானவற்றை யெல்லாம் பெற்றுக்கொண்டு தன்னைப் பிரிவறப் பூசிக்குமாறு தன் கூருகிய இட்டலிங்கத்தைத் தருகிருன். அதனுலே, ''தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை'' என்று கூறினர் என்றலுமாம். திருச்சதகம் 26 ஆம் பாடலில்

"ஐம்புலன்கள் ஆர ஆசானாய் வந்தனை வந்து ஆட்கொண்டு வழி படுமாறு உன்னைத் தந்தனை" என்பதனால் "தந்ததுன்றன்னை" என்ற செய்தியையும்; "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும், குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" (7 - குழைத்த பத்து) என்பதால் கொண்ட செய்தியையும் அறியலாம்.

முடிபு :- சங்கரா! உன்றன்னைத் தந்தது; என்றன்னைக் கொண்டது; (நம்மிருவரில்) சதுரர் யார்? ஆனந்தம் பெற்றேன்; என்பால் யாது நீ பெற்றதொன்று; சிந்தையே கோயில் கொண்ட பெருமானே! ஈசா! உடலிடம் கொண்டாய்; இதற்கு இலன் ஓர் கைம்மாறு.

— கோயிற் றிருப்பதிக உரை முற்றும் —

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	16	எழுந்தரு யிருளிக்கும்	எழுந்தருளியிருக்கும்
,,	25	அடண்த்தில்	அண்டத்தில்
,,	31	என்னும்	என்றும்
6	11	கோயிற் திருப்பதிகம்	கோயிற்றிருப்பதிகம்
,,	31	பரமும்வந்	பரமுவந்
,,	32	நிகழல்	றிகழல்
7	3	ஆசான்	ஆசான் பார்ப்பித்திடுதல்
,,	8	சிவலிங்கத்திள்ள	சிவலிங்கத்திலுள்ள
,,	27	களித்தன்	களித்தனன்
,,	28	அணையப்	அணையப்
8	2	சிவலிங்கத்	சிவலிங்கந்
,,	12	மாறினர்	மாறினன்
,,	15	நிகழ்ந்த பொது	நிகழ்ந்தபோது
,,	20	கோயிற்றிப்பதிகமாம்	கோயிற்றிருப்பதிகமாம்
17	11	பெருந்துறையுரை	பெருந்துறையுறை
,,	33	இல்லாதவர்	இல்லாதவன்
18	11	பெருந்துறையுரை	பெருந்துறையுறை
,,	24	பெருத	பெருத
21	17	கலத்தில்	காலத்தில்
23	10	நுணிகயவனுவும்	நுணுகியவனுகவும்
24	6	இன்றெனக் கருள	இன்றெனக் கருளி
,,	27	பரம்பே	பரப்பே
25	16	புறத்தூய்மை	புறந்தூய்மை